**செய்தி வெளியீடு எண் : 1596** **நாள் : 14.09.2022**

# மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் மாதவரத்தில் சென்னை வடக்கு மின் பகிர்மான வட்ட சிறப்பு ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் இன்று (14.09.2022) மாதவரம் உமியா மகாலில் சென்னை வடக்கு மின் பகிர்மான வட்ட சிறப்பு ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ்.சுதர்சனம் (மாதவரம்), திரு.ஆர்.டி.சேகர் (பெரம்பூர்), திரு.ஐட்ரீம் இரா.மூர்த்தி (இராயபுரம்), திரு.கே.பி.சங்கர் (திருவொற்றியூர்), திரு.ஜெ.ஜெ.எபினேசர் (ஆர்.கே.நகர்), திரு.துரை.சந்திரசேகர் (பொன்னேரி), தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., மாநகர மண்டல குழுத் தலைவர் திரு.நந்தகோபால், இயக்குநர்/பகிர்மானம் திரு.மா.சிவலிங்கராஜன் மற்றும் தொடர்புடைய தலைமை பொறியாளர், மேற்பார்வை பொறியாளர், செயற் பொறியாளர்கள், உதவி செயற் பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் சென்னை வடக்கு மின்பகிர்மான வட்டத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட திட்ட முன்னேற்றப் பணிகள் குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்றப் பணிகள் குறித்தும் மேலும், சட்டமன்றத்தில் எரிசக்தித் துறை சார்பாக அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் குறித்தும் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்வதற்கும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.வி செந்தில்பாலாஜி அவர்கள் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்.

இந்த சிறப்பு ஆய்வுக் கூட்டத்தில், 30 நிமிடங்களுக்கு மேல் மின் தடங்கல் ஏற்பட்ட நிகழ்வுகள் குறித்து ஒவ்வொரு அலுவலரிடமும் அதற்கான காரணத்தை அந்தந்த அலுவலர்களிடம் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து

தொடர்ச்சியாக மின்தடங்கல் ஏற்படும் இடங்களில் சிறப்பு கவனம் செலுத்தி அதற்கான காரணத்தை கண்டறிந்து உடனடியாக சரிசெய்வதற்கு அனைத்து அலுவலர்களுக்கும் உத்தரவிட்டார். பொதுமக்களிடமிருந்து மின்னகம் மூலம் பெறப்படும் புகார்கள் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறும், மேலும், பொதுமக்கள் அனைவருக்கும் தடையில்லா மின்சாரம் தொடர்ந்து கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அனைத்து அலுவலர்களையும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்ற அனைத்து அலுவலர்களிடமும் நேரடியாக அவர்களுடைய பிரிவு அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்தும், கடந்த ஒரு வாரகாலத்தில் வரப்பெற்ற புகார்கள் குறித்தும் விரிவான ஆய்வினை மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வராவண்ணம் அனைத்து அலுவலர்களும் செயல்பட வேண்டும் என்று அனைவரையும் அறிவுறுத்தினார்.

இதுவரையில், சுமார் சிறப்பு பராமரிப்பு திட்டத்தின் கீழ் 11,007 பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டிருக்கின்றன.

இதுவரையிலும், சென்னை வடக்கு மின் பகிர்மான வட்டத்தில் நிறுவப்பட்டுள்ள 24,805 பில்லர் பெட்டிகளில் மழை காலத்தின் போது தண்ணீர் தேங்குவதன் பொருட்டு 1,295 பில்லர் பெட்டிகள் தரைமட்டத்திலிருந்து ஒரு மீட்டர் உயரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், 1,239 பில்லர் பெட்டிகள் வருகின்ற 30.09.2022–க்குள் உயரப்படுத்தப்பட உள்ளன. இதேபோல், பெரியார்நகர் 33/11 கே.வி. துணை மின் நிலையத்தில் உள்ள 3 மின்மாற்றிகளின் அடித்தளத்தை ஒரு மீட்டர் உயரத்திற்கு உயரப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி பகுதிகளில் செல்லும் மேல்நிலை மின்கம்பிகளை புதைவடங்களாக மாற்றும் பணிகள் பெரம்பூர் கோட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு சுமார் 675 கி.மீ. மேல்நிலை மின்கம்பிகள் புதைவடங்களாக ரூபாய் 210 கோடி செலவில் முடிவடைந்திருக்கின்றன. இதுதவிர்த்து, இந்த வருடத்திற்குள் வடக்கு மின்பகிர்மான வட்டத்தைச் சார்ந்த தண்டையார்பேட்டை மற்றும் வியாசர்பாடி ஆகிய இரண்டு கோட்டங்களில் சுமார் ரூபாய் 133 கோடி செலவில் மேல்நிலை மின்கம்பிகளை

புதைவடங்களாக மாற்றும் பணிகளுக்கான ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் உள்ளது.

இதேபோன்று, சென்னை மாநகரத்தில் உள்ள இதர கோட்டங்களான அம்பத்தூர், அண்ணாநகர், போரூர், கிண்டி மற்றும் கே.கே.நகர் ஆகிய கோட்டங்களிலும் ரூபாய் 1103 கோடி செலவில் பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதுவரையிலும், சென்னை வடக்கு மின்பகிர்மான வட்டத்தில் 1,029 வளைய சுற்றுத்தர அமைப்பு (Ring Main Unit) ரூபாய் 149 கோடி செலவில் நிறுவுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. அவற்றுள் 465 வளைய சுற்றுத்தர அமைப்புகள் ரூபாய் 67.40 கோடி செலவில் நிறுவப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு மின்னூட்டம் செய்வதற்கு தயார் நிலையில் உள்ளன.

சட்டசபை மானியக் கோரிக்கையின் போது எரிசக்தித் துறை சார்பில் சென்னை வடக்கு மின்பகிர்மான வட்டத்திற்கு நான்கு 110 கே.வி. துணை மின் நிலையங்கள் (மாதரப்பாக்கம், கொடுங்கையூர், தண்டையார்பேட்டை துர்காதேவி நகர் மற்றும் பொன்னேரி), நான்கு 33 கே.வி. துணை மின் நிலையங்கள் (மகாகவி பாரதியார் நகர், பெருஞ்சேரி, கும்மிடிப்பூண்டி தேவம்பட்டு மற்றும் ரேடியன்ஸ் மாதவரம்) என மொத்தம் 8 துணை மின்நிலையங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் 33 கே.வி. துணை மின் நிலையங்கள் ரூபாய் 70 கோடி செலவில் அமைப்பதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி வேலையினை தொடங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதேபோன்று, ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கும் 18 துணை மின் நிலையங்களில் இருக்கக்கூடிய மின்மாற்றிகளின் திறனை தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை கருத்திற்கொண்டு மேற்பார்வை பொறியாளர்கள், தலைமைப் பொறியாளர்கள் அனைவரும் தகுந்த முன்னெச்சரிக்கையுடன் செயல்படுமாறும், தேவைப்படும் அனைத்து உபகரணங்களையும், தளவாட சாமான்களையும் இருப்பில் வைத்துக் கொள்ளுமாறும், பணியாளர்கள் அனைவருக்கும் உரிய பாதுகாப்பு உபகரணங்களை அளித்து விரைவாக

பாதுகாப்பான முறையில் மின்கட்டமைப்பை சீர்செய்ய வேண்டும் எனவும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அனைத்து அலுவலர்களுக்கும் உத்தரவிட்டார்.

**பின்னர், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,**

தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய மின் பகிர்மான வட்டங்களில் தமிழகம் முழுவதும் நேரில் சென்று தலைமைப் பொறியாளர்கள் முதல் உதவி பொறியாளர்கள் வரை அனைத்து தரப்பட்ட அதிகாரிகளையும், அலுவலர்களையும் ஆய்வு கூட்டங்களிலே பங்குபெறச் செய்து ஒவ்வொருவரையும் பேசவைத்து மின்சார வாரியத்தினுடைய செயல்பாடுகளை வேகப்படுத்துவதற்காக மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவின் அடிப்படையில் இன்று சென்னை வடக்கு மின்பகிர்மான வட்டத்தினுடைய ஆய்வுக் கூட்டம் நடந்து முடிந்திருக்கிறது. குறிப்பாக, புகார்களைப் பொறுத்தவரை தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ 11 இலட்சம் புகார்கள் பெறப்பட்டு அதில் 99 விழுக்காடு புகார்களுக்கான தீர்வுகள் காணப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, சென்னை வடக்கு மின் பகிர்மான வட்டத்தினைப் பொருத்தவரை கும்மிடிப்பூண்டி, திருவொற்றியூர், ஆர்.கே. நகர் போன்ற பகுதிகளில் கடந்த காலங்களில் பணிகளை உரிய காலத்தில் பூர்த்தி செய்யாமல் விட்டதின் காரணமாக, கடந்த 15 மாதங்களில் தொகுதிகள் வாரியாக விடுபட்ட பணிகள் கணக்கெடுக்கப்பட்டு அதற்கான பணிகளை வேகப்படுத்தி அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்னை வடக்கு மின் பகிர்மான வட்டத்தைப் பொறுத்தவரை உத்தேசிக்கப்பட்ட பணியில் 60 சதவீத பணிகள் நடந்து முடிந்திருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய 40 விழுக்காடு பணிகள் விரைவாக முடிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. தமிழகம் முழுவதும் ஒவ்வொரு மின் பகிர்மான வட்டம் வாரியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் நேரில் அந்தந்த மாவட்டங்களில் சென்று இது போன்ற ஆய்வு கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற இருக்கின்றது.

மின் கணக்கீட்டைப் பொறுத்தவரை 60 நாட்களில், 10.09.2022 வரை கணக்கிட்டு 09 நாட்களுக்கு பழைய கட்டணமும், மீதம் இருக்கக்கூடிய 51 நாட்களுக்கு புதிய கட்டணமும் நிர்ணயம் செய்யப்படும்.

மின் கட்டணம் திருத்தி அமைப்பது சம்பந்தமாக மாண்புமிகு ஒழுங்குமுறை ஆணையம் பொதுமக்களுடைய கருத்துக்களை கேட்பதற்காக கூட்டங்களை மூன்று இடங்களில் நடத்தியது. மெயில் மற்றும் நேரில் வந்து புகார் தந்தது உட்பட மொத்தம் 7,338 புகார்கள் மட்டும் தான் வரப்பெற்றது. தமிழ்நாட்டில் மொத்தம் 3.5 கோடி மின் இணைப்புகள் இருக்கின்றன. ஆனால், புகார் வரப்பெற்றது 7,338 மட்டுமே. சிலர் கூறும் கருத்துக்கள் அரசியலுக்காக கூட இருக்கலாம். நாளை மறுநாள் 16ஆம் தேதி ஆர்ப்பாட்டம் என்று ஒரு கட்சி அறிவித்திருக்கிறது, அவர்கள் ஆட்சியில் இருக்கும் போது எந்த அளவிற்கு உயர்த்தினார்கள்? பிறகு மின்சார வாரியம் எவ்வளவு கடனை சுமந்தது? 1,59,000 கோடி கடன், 16,500 கோடியாக ஒரு வருடத்திற்கு வட்டி மட்டும் கட்டுகிறோம். ஒன்றிய அரசும் ஒழுங்குமுறை ஆணையங்களும் தொடர்ந்து எத்தனை முறை தமிழ்நாடு மின்சார வாரியத்தை கட்டணத்தை உயர்த்துவதற்கு அழுத்தம் கொடுத்தார்கள்? வெறும் 67 கோடி பாக்கி இருந்த சூழலில் நமக்கு கிடைக்க வேண்டிய மின்சாரத்தை கொடுக்காமல் நிறுத்தி வைத்தார்கள். மின்சார கட்டணத்தின் உயர்வு தமிழ்நாட்டில் மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது மிகக் குறைந்த அளவே உள்ளது.

தமிழக அரசினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள். கடந்த ஆண்டு 9,000 கோடி அரசு நிதியை மானியமாக கொடுத்தார்கள். இந்த வருடம் மின் கட்டணம் உயர்விற்கு பிறகு 3,500 கோடியில் இருந்து 4,000 கோடி அளவிற்கான அரசு மானியம் கொடுப்பதற்கு ஒப்புதலை கொடுத்திருக்கிறார்கள். இந்த கட்டண உயர்வுக்கு பிறகு ஒரு அரசு 4,000 கோடி மானியம் கொடுத்து மின்சார வாரியத்தை காப்பாற்றுகிறது என்றால், தமிழகத்தில் மின் கட்டணம் மற்ற மாநிலங்களைவிட மிக குறைவாக வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

இப்போது, மின் உற்பத்திக்கும் மின் விநியோகத்திற்குமான இடைவெளி அதிகமாக இருக்கிறது. அந்த இடைவெளியை சரி செய்ய வேண்டும். இந்த 5

ஆண்டுகளில் புதிய தொழிற்சாலைகள், டேட்டா சென்டர் வரவு, ஆண்டுக்கு 10 இலட்சம் கொடுக்கக்கூடிய புதிய மின் இணைப்புகள், விவசாயிகளுக்கு கொடுத்திருக்கிற 1 இலட்சம் மின் இணைப்புகள், இந்த வருடம் 50,000 மின் இணைப்புகள் என இவற்றையெல்லாம் கணக்கில் பார்க்கும் போது அடுத்த 5 ஆண்டுகளுக்குள் 50 விழுக்காடுக்கும் மேலாக மின் தேவை ஏற்படும் என்பது கணக்கிடப்பட்டிருக்கிறது. அதற்கான மின் உற்பத்தி திட்டங்களும் விரைவுபடுத்தப்பட்டிருக்கிறது. 5 வருடத்தில் 6,220 மெகாவாட் அளவிற்கு கூடுதல் மின் உற்பத்தி நிறுவுதிறன் அமைப்பதற்கான பணிகள் முடிக்கப்பட்டு மின் கட்டமைப்புடன் இணைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. புதைவட கேபிள்களைப் பொறுத்தவரை தண்டையார்பேட்டை மற்றும் வியாசர்பாடி ஆகிய இரண்டு கோட்டங்களில், 133 கோடி ரூபாய்க்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய பகுதிகளில் 1,103 கோடி ரூபாய்க்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு டெண்டர் விடக் கூடிய நிலையில் உள்ளது. டெண்டர் முடிந்த பிறகு பணிகள் தொடங்கப்படும். சென்னை மாநகராட்சியினுடைய முழுப் பகுதிகளுமே விரைவாக புதைவட கேபிள்கள் போட வேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவு, ஓராண்டு காலத்திற்குள்ளாக இந்த பணிகள் தொடங்கி விரைவாக முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மொத்தம் 316 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என சட்டசபையில் அறிவிக்கப்பட்டன. அதில், 242 துணை மின் நிலையங்களுக்கான இடங்கள் கண்டறியப்பட்டு மின்வாரியத்தினுடைய பெயருக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டு அதில் 138 துணை மின் நிலையங்களுக்கான திட்ட மதிப்பீடுகள் முழுவதுமாக தயார் செய்யப்பட்டு ரூ.7,525 கோடி அளவிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு இப்போது டெண்டர் நிலையில் இருக்கின்றன, டெண்டர் முடிந்த பிறகு அந்த பணிகளை உடனடியாக தொடங்குவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மின் கட்டணத்தைப் பொறுத்தவரை வரபெற்ற புகார்களின் அடிப்படையில் சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களை சார்ந்தவர்கள் மின் கட்டணம் அதிகமாக இருப்பதாக தெரிவித்ததின் பேரில் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின்

கவனத்திற்கு எடுத்து சென்று 3,217 கோடி அளவிற்கு உத்தேசிக்கப்பட்ட கட்டண உயர்வு புகாரின் அடிப்படையில் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த அதிமுக ஆட்சியில் மின் கட்டண உயர்வைப் பொறுத்தவரை 60 சதவிகிதத்திற்கும் மேல் சராசரியாக உயர்த்தப்பட்டது. ஆனால் தற்போது 20 முதல் 24 விழுக்காடு மட்டுமே அதிகபட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in